[2011 ஜனவரி 10

2—

பயிற்சிப் பள்ளி

*104901—**திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், அவையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மொடக்குறிச்சி தொகுதியில் இருக்கக்கூடிய ஓடாநிலை, கொங்கு மாநிலத்திலே முதல் சுதந்திரப் போராட்டத் தியாகி தீரன் சின்னமலை வாழ்ந்த இடம். அந்த இடத்திலே ஒரு வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிறோம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த அந்தக் கோரிக்கை அரசுக்கு வரவில்லை. வேண்டுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அதை எழுதிக் கொடுத்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.